**05.02.2024 அ.வ.எண்.111/2007 வா.சா.1 மைதிலி, க/பெ. மேகநாதன்**

**குறுக்கு விசாரணை**

நானும் என் கணவரும் ஒரு முகவரியில் தான் வசிக்கிறோம். வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது தான் அந்த முகவரி ஆகும். என் கணவர் 5-ம் பிரதிவாதியாக உள்ளார் அவருக்கு எதிராக ஏன் வழக்கு தாக்கல் செய்தேன் என கேட்டால் அது விவரம் தெரியாது. என் கணவர் தனியாக ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் கணவர் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என கேட்டால் நிலங்கள் அவரால் கிரயம் பெறப்பட்டது என்றும் அவை அவருக்கே சொந்தம் என்றும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு எண்.103/2007 என்றால் - ஆமாம். என் கணவர் தாக்கல் செய்த வழக்கும் இந்த வழக்கும் ஒரே சொத்துக்கானது என்றால் - ஆமாம். என் கணவர் கிரயம் வாங்கி பிறகு எனக்கு கிரயம் கொடுத்துவிட்டார். என் கணவர் வழக்கு தாக்கல் செய்தபோது சொத்துகள் அவர் பெயரில் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்தார். அவர் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் எனக்கு கிரயம் கொடுத்தார். என் பெயரில் கிரயப்பத்திரம் ஏற்பட்ட பின்னர்தான் என் கணவர் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது சரியல்ல. என் பெயருக்கு கிரயப்பத்திரம் ஏற்படும் முன்னரே அதே சொத்துக்கு 4-ம் பிரதிவாதி பெயரில் கிரயப்பத்திரம் ஏற்பட்டிருந்தது என்றால் அது சரியல்ல 2 பத்திரமும் ஒரே நாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 4-ம் பிரதிவாதி பெயருக்கு கிரயப்பத்திரம் எழுதி கொடுத்தது 1-ம் பிரதிவாதி ஆவார். என் கணவர் கிரயம் வாங்கும் முன்னர் சொத்துகள் 1-ம் பிரதிவாதிக்கு சொந்தம். 1-ம் பிரதிவாதி என் கணவருக்கு அதிகார ஆவணம்தான் எழுதிக் கொடுத்ததாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1-ம் பிரதிவாதி என் கணவருக்கு கிரயம் தான் கொடுத்தார். 1-ம் பிரதிவாதி என் கணவர் பெயருக்கு அதிகார ஆவணம் தான் எழுதிக்கொடுத்திருந்தார் என்றும் அதனை என் கணவர் தவறாக பயன்படுத்த முயன்றார் என்றும் அதனால் 1-ம் பிரதிவாதி அதிகார ஆவணத்தை இரத்து செய்துவிட்டு 4-ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் அது சரியல்ல. என் கணவருக்கு கிரயம் கொடுக்க உரிமை இல்லை என்றும் எனவே, அவர் என் பெயருக்கு எழுதிக் கொடுத்த கிரயம் செல்லாது என்றும் சொன்னால் அது சரியல்ல. எனது கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் எனது பெயருக்கு பட்டா ஏதும் பெறவில்லை. சொத்துகளின் உரிமை எனக்கு இல்லை என்பதால்தான் பட்டா கொடுக்கப்படவில்லை என்பது சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2 1/2 ஆண்டுகள் மண்ணு என்பவர் மூலம் சொத்துகளில் பயிர் வைத்தேன் அதன்பிறகு 4-ம் பிரதிவாதி பயிர் வைக்க விடாமல் தடுத்துவிட்டார். அதிலிருந்து நாளது வரை சொத்துகளில் நான் பயிர் வைக்கவில்லை. நான் 2 1/2 வருடம் பயிர் வைத்ததை காட்டும் வருவாய் துறை ஆவணம் இல்லை. நான் பயிர் வைத்ததற்கு முன்னர் சம்பத் என்பவர் பயிர் வைத்தார் நான் கிரயம் பெற்றபிறகு அவர் சொத்தை விட மறுத்துவிட்டார் அதனால் பஞ்சாயத்து வைத்து சம்பத்திற்கு ரூ.10,000/- கொடுத்தேன் அதன்பிறகே அவர் சொத்தை விட்டார். நான் சொல்லும் பஞ்சாயத்து மற்றும் தொகை செலுத்தத்திற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். 1-ம் பிரதிவாதி என் கணவருக்கு

எழுதிகொடுத்த அதிகார ஆவணத்தை இரத்து செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என கேட்டால் எனக்காக பயிர் வைத்த மண்ணு என்பவர் சொல்லித்தான் அந்த விவரம் எனக்கு தெரியும். அந்த விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என கேட்டால் எனக்கு தெரியவில்லை. எனக்கு ஒரு மூத்த சகோதரி உள்ளார் அவர் பெயர் செல்சா அவர் இளங்காடு கிராமத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அங்கு வசிக்கிறார். அவரது கணவர் பெயர் வரதன். அந்த வரதன் அ.வ.எண். 76/2008 வழக்கை தாக்கல் செய்தவர் ஆவார். எனது கிரயப்பத்திரத்திற்கு வரதன் சாட்சி கையொப்பம் போட்டும் என்பது சரிதான். அவர் அவரது பெயருக்கு என் கணவர் கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளதாகவும் அதன்படி கிரயப்பத்திரம் எழுதிதர கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது சரிதான். அந்த வழக்கில் என்னையும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது என்பது சரிதான். அந்த வழக்கில் என் கணவர் கிரய தொகையை திருப்பி தர தயாராக உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி அவரிடம்தான் கேட்க வேண்டும். என் பெயருக்கு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் வரதனுக்கு தெரியும். அவரும் கிரய தொகையை திருப்பி கொடுத்தால் போதும் என சொல்லிவிட்டார். நானும் வரதனும் உடந்தையாக இருந்துக்கொண்டு இதர பிரதிவாதிகளை மிரட்டுவதற்காக வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்பது சரியல்ல. சொத்து எனக்கு உரிமையானது அல்ல என்றும் அதன் அடிப்படையில் நான் விளம்புகை கோர இயலாது என்றும் சொன்னால் அது சரியல்ல. 4-ம் பிரதிவாதி கடந்த 23 ஆண்டுகளாக சொத்துகளுக்கான பட்டாவை தன் பெயருக்கு மாற்றிக்கொண்டு பயிர் செய்து அனுபவித்து வருகிறார் என்றால் நான் பயிர் வைப்பதை விட்டபிறகிருந்து 4-ம் பிரதிவாதிதான் பயிர் செய்கிறார் அது 23 வருடமா என்பது எனக்கு தெரியாது. என் கணவர் தாக்கல் செய்த வழக்கு என்ன ஆனது என்பது அவரை கேட்டால்தான் தெரியும்.